இருக்கிறார்கள். படித்த இளைஞர்கள் வாழ்க்கையிலே உயர வேண்டுமென்ற நல்ல எண்ணம் கொண்ட எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, அரசு தொழிற்பயிற்சி மையம் ஒன்று திருப்பத்தூரில் தொடங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம் பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 இருக்கைகள் கொண்ட ஒரு அரசு தொழிற்பயிற்சி மையம் துவங்க வேண்டுமானால் தொடரினச் செலவாக ரூ. 5 இலட்சமும், தொடரா இனச் செலவாக ரூ. 55 இலட்சமும், ஆக ரூ. 60 இலட்சம் செலவு ஆகின்றது. தற்போதுள்ள நிதி நிலை நெருக்கடியைக் கருத்திற் கொண்டும், தொழிற்பயிற்சி பயின்று வேலைக்காகக் காத்திருப்பார் அதிகமாக இருப்பதாலும், மேலும் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

18—

நீலிப்பாளையத்தில் குடிநீர் வழங்குதல்

*22458—டாக்டர் மு. சீனியம்மாள்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, நீலிப்பாளையத்தில் குடிநீர்த் தொட்டி கட்டி, காற்றழுத்த மின்மோட்டார் பொருத்தி குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வினா எழ இடமில்லை.

(ஆ) ஏற்கனவே அவிநாசி ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் நீலிப்பாளையத்திற்காக ஒரு தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு தற்போது Air Compressor காற்றழுத்த மின்மோட்டார்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1995 மார்ச் 15]

மூலமாக கடந்த *6* மாத காலமாகக் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதி மக்களுடைய இதயக் குடிசைகளில், இலவசமாய், நிரந்தரமாய், ஏற்றி வைக்கப்பட்ட ஒளி விளக்காய் தமிழகத்தினுடைய முதல்வர், நம் அன்னை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பதவி ஏற்ற நேரம் முதற்கொண்டுதான், சுதந்திரம் வாங்கப்பட்ட நாளிலிருந்து ஏற்பட்ட அடிப்படை வசதிகளை ஏழை எளிய, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மயானப் பாதை, *5* பேர்கள் இருந்தால்கூட ஆழ் குழாய்க் கிணறு, சாலை வசதிகள் போன்றவற்றை மிக நன்றாக ஏற்படுத்தி, மக்கள் சீரோடும், பொலிவோடும் வாழ்கின்ற நிலையில், அவர்கள் பாராட்டுகின்ற அளவுக்குச் செய்து கொடுத்தமைக்காக இந்த அரசினை, அனைத்துக் கட்சியினரும் பாராட்டுகின்றதை இந்த அவையிலே தெரிவித்து, அதற்காக நெஞ்சார்ந்த, நன்றி கலந்த வணக்கங்களை நம் அன்னையினுடைய பொற்பாதங்களிலே பதித்து நன்றி கூறி, தொகுதி மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்பாக நான் இந்தக் கேள்வியைக் கொடுத்தேன். இன்றைக்கு அனைத்துக் குறைகளும் ஏறக்குறைய எல்லாமே முடிந்துவிட்ட நிலையில், அமைச்சர் அவர்கள், நாளைக்கு அவினாசிக்கு வருகை தர இருக்கிறார்கள். நமது அன்னையினுடைய ஆசியைப்பெற்று அங்கு நடக்கவிருக்கின்ற விழாவில் நமது அமைச்சர் அவர்கள் அதைத் திறந்து வைத்து எங்களுக்குப் பெருமை தந்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன், நன்றி.

முற்பகல் *11-05*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *19*, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

19—

ஏற்காட்டில் கோல்ப் விளையாட்டு மைதானம் அமைத்தல்

21509*—டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சுற்றுலா மையமான ஏற்காட்டில் ஒரு கோல்ப் விளையாட்டு மைதானம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?